சுயநிதி கல்வி நிறுவனங்களுக்காக 1989-90-ல் ரூ. 75 ஆயிரம், 1990-91-ல் ரூ. 90 ஆயிரம், 1991-92-ல் ஒரு லட்சம், இப்பொழுது ஒரு லட்சத்து 20 ஆயிரம். ஆகவே, பல்லவன் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரையிலும் 1991-92-ல் எந்தப் பேருந்துகளும் கல்வி நிறுவனங்களுக்கு வழங்கப்படவில்லை.

முற்பகல் 10-25

திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லவன் போக்குவரத்துக் கழகத்தைப் போன்றே தமிழகத்தில் இருக்கின்ற, பிற மாவட்டத்தில் இருக்கின்ற, இதுபோன்ற அரசு போக்குவரத்துக் கழகங்களால் அந்த பகுதியில் இருக்கின்ற நல்ல கல்வி நிறுவனத்திற்கு இதுபோன்ற சலுகை அடிப்படையில் பேருந்துகள் வழங்கப்பட்டு வருகிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விதிமுறைகள் எல்லா போக்குவரத்துக் கழகங்களுக்கும் பொருந்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 309, திரு. இரா. அப்பு நடேசன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

309—

மேல்புரம் ஊராட்சி ஒன்றியத்தில் பேரை குடிதண்ணீர் திட்டம்.

*9825— திரு. இரா. அப்பு நடேசன் :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், மேல்புரம் ஊராட்சி ஒன்றியத்தில் பேரை குடிதண்ணீர்த் திட்டம் செயல்படாமல் இருப்பது அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அவ்வூரிலுள்ள ஆதி திராவிட மக்களுக்கு குடிநீர் வழங்க உடனடியாக அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இக்கிராமத்தில் ஆதி திராவிட மக்களுக்கு பேரை குடிநீர்த்திட்டம் முடிவடைந்தவுடன் குடிநீர் வழங்கப்படும்.

1993 ஏப்ரல் 12]

திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குடிநீர் திட்டம் முடிந்தவுடன் தண்ணீர் வழங்கப்படும் என்று சொன்னார்கள், இந்தக் குடிநீர் திட்டம் துவங்குவது எப்போது? எப்போது முடிவடையும் என்று அமைச்சர் கூறுவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரை கிராமத்தின் மக்கள் தொகை 2,300. இங்குள்ள குடிதண்ணீர் பிரச்சினையால் இந்தக் கிராமத்திற்கு குடிநீர் வசதி செய்வதற்கு ஏற்கெனவே திட்டம் ஒப்புதல் வழங்கப்பட்டு மேல்நிலைத் தொட்டி கட்டும் பணிகள் மற்றும் பகிர்மானக் குழாய்கள் அமைக்கும் பணிகள் முடிவடைந்துள்ளன. இயந்திர அறை கட்டுவதற்கு சில் விஷமிகளின் இடையூறுகளால் தடைப்பட்டிருக்கிறது. இது மாவட்ட ஆட்சித் தலைவரின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இப்பொழுது பணிகள் காவல் துறையின் பாதுகாப்போடு நடைபெற்று வருகிறது. விரைவில் முடிக்கபபடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவில் முடிக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஓரிரு வருடங்களாக மாவட்ட டி.டி.சி. மன்றத்தில் இதைப் பற்றி கேட்கும்போது எல்லாம் 2 மாதத்திலே முடிக்கப்படும். 3 மாதத்திலே முடிக்கப்படும். 1993 மார்ச்சுக்குள் முடித்துத் தருவோம் என்று கூட வாக்குக் கொடுத்திருக்கிறார்கள். அங்கு இதுமட்டுமல்லாமல் இதுபோன்று பல குடிதண்ணீர் திட்டங்கள் எல்லாம், மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி மட்டும் கட்டி அப்புறம் அப்படியே விட்டுவிடுகிறார்கள். ஆகவே இந்தக் குடிநீர் திட்டம் மற்றுமுள்ள குடிநீர் தேக்கத் தொட்டிகளையும் கூடிய சீக்கிரம் பூர்த்தி செய்து ஏழையெளிய மக்களுக்கு தண்ணீர் வழங்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை விரைவில் முடிப்பதற்காக மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது. மேற்கொண்டு எந்தெந்த இடங்களில் இதுபோன்ற திட்டங்கள் விரைவாக நடக்கவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னிடத்தில் தெரிவித்தால் விரைவில் நடவடிக்கை எடுக்க வாய்ப்பாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

[1993 ஏப்ரல் 12

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 310 திருமதி ப. சரஸ்வதி, இருக்கையில் இல்லை.

வினா எண் 311, டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

311—

கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம்.

*11029— டாக்டர் வெ. சரோஜா :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்தின் கீழ், இந்திய விஞ்ஞானிகளுடன், இத்துறையில் சிறந்த அயல்நாட்டு விஞ்ஞானிகளை வரவழைத்து இத்திட்டத்தை விரைவில் செயல் படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கடல்நீரை குடிநீராக்கும் திட்டம் இவ்வரசின் பரிசீலனையில் உள்ளது. வெளிநாட்டு விஞ்ஞானிகளை இத்திட்டத்திற்காக வரவழைக்கும் கருத்து இல்லை.

டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடல்நீரைக் குடிநீர் ஆக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இந்தத் திட்டம் குறித்து இதுவரை அரசு எடுத்த நடவடிக்கை என்ன என்று அவையில் கூறுவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மத்திய உப்பு மற்றும் கடல் இரசாயன ஆராய்ச்சி நிலையத்தின் உதவியுடன் இராமநாதபுரத்தில் மேல்குடுமனூர் மற்றும் நெச்சிவாயல் ஆகிய இடங்களில் இரண்டு உப்புநீரை குடிநீராக்கும் நிலையங்களும், செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் புத்தகரத்தில் ஒரு நிலையமும் நிறுவப்பட்டுள்ளது. மைய அரசின் உதவியுடன், தொழில் நுட்ப மையத்தின் கீழ் இராமநாதபுரம் மாவட்டத்தில் 13 உவர்ப்பு நீரை குடிநீராக்கும் நிலையங்களும், தென்னாற்காடு மாவட்டத்தில் 9 உவர்ப்பு நீரை குடிநீர் ஆக்கும் நிலையங்களும் நிறுவப்பட்டு பராமரிப்பில் உள்ளது. சென்னை